பக்கங்கள் 22+ 04

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 26 ஞாயிற்றுக்கிழமை 12.10.2025 | அதிர்வு 73

## ரணில் - சஜித் இணைவு: வரவேற்கின்றார் இராதா



ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும், சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய 04▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

### அநுர அரசுக்கு எதிராக

# கொழும்பில் நவம்பர் 11 இல் பெரும் பேரணி!

### ரணில் - சஜித் தீர்மானம்



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசின் சர்வாதிகாரப் போக்குக்கும் அடக்கு முறைகளுக்கும் எதிராகக் கொழும்பில் மாபெரும் எதிர்ப்புப் பேரணி ஒன்றை நடத்த எதிர்க்கட்சிகள் ஒன்றுதிரண்டுள்ளன.

இந்தப் பேரணியை எதிர்வரும் நவம்பர் 11 ஆம் திகதி நடத்துவதற்கும், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதான எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோரின் பங்களிப்புடன் நடத்துவதற்கும் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

பிளவுபட்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஒன்றி 04▶

# சங்குப்பிட்டியில் கரையொதுங்கிய பெண்ணின் சடலம்!



(த.சுபேசன்)

கிளிநொச்சி, பூநகரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்குப்பிட்டிக் கடல் பகுதியில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை இளம் பெண் ஒருவருடைய சடலம் கரையொதுங்கியுள்ளது.

மேற்படி பெண் இறந்து மூன்று நாள்களாகி இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் நிலையில் இதுவரை பெண்ணின் சடலம் அடையாளம் காணப்படவில்லை எனத் தெரிவிக் கப்படுகின்றது.

மேற்படி சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பூநகரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.





# பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு இவ்வருடத்துக்குள் ரூ. 1,750 நாள் சம்பளம்

## ஜனாதிபதி அநுர உறுதி

இந்த ஆண்டுக்குள் மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,750 ரூபா நாள் சம்பளத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு எவ்வாறேனும் நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உறுதியளித்தார்.

பதுளை, பண்டாரவளை பொது விளையாட்டரங்கில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மலையக மக்களுக்கு வீட்டு உரிமைகளை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

வீட்டு உரிமைப் பத்திரங்களைப் பெறும் 2 ஆயிரம் பயனாளர்களுக்கு ஜனாதிபதி, அடையாளமாக உரிமைப் பத்திரங்களை வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில்,

“மலையக சமூகம் ஒரு சிறந்த பணியைச் செய்து வருகின்றது. அவர்கள் 202 வருடங்களாக வாழ்ந்து வருகின்றனர். எனவே, ஓர் அரசாங்கமாக, அவர்களுக்கு அடிப்படைத் தேவைகளையும் வசதியான வாழ்க்கையையும் வழங்க வேண்டிய பொறுப்பு எங்களுக்கு உள்ளது.

ஓர் அங்குலமேனும் காணி உரிமை அற்றவர்களாக வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்குக் காணி உரிமை, வீட்டு உரிமை வழங்க வேண்டியது அரசின் பொறுப்பாகும். இதற்குரிய வேலைத்திட்டம் நிச்சயம் நிறைவேற்றப்படும்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளம் வழங்கப்பட வேண்டும். 1,750 ரூபா நாளாந்த சம்பளம் வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது. இந்த வருடத்துக்குள் இந்தச் சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுக்க நடவ டிக்கை எடுக்கப்படும்.

தோட்டங்களைச் சூழவுள்ள வைத்திய சாலைகளை அரசு பொறுப்பேற்பது குறித்தும், சிறந்த சுகாதார சேவைகளை வழங்குவது சம்பந்தமாகவும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

மக்களுக்குரிய சுகாதாரம் அரசின் பொறுப்பு. அதனைக் கம்பனிகளிடம் வழங்கத் தயாரில்லை.

மலையக மக்களுக்குரிய சமூக அந்தஸ்த்து, கலாசார உரிமை, அவர்களுக்குரிய அடையாளம் என்பன காக்கப் படும். அனைத்து இன மக்களுக்கும் இது பொருந்தும்.

மலையக மக்கள் இந்த நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழ்ந்தனர். இறந்த பின்பும் இந்த மண்ணுக்கு உரமாகினர். அவர்கள் இரண்டாம் தரப் பிரஜைகள் அல்லர். அவர்களுக்குச் சம உரிமை உள்ளது.

பாரம்பரிய அரசியல் முகாம்களை நிராகரித்து, புதிய நம்பிக்கையுடன்தான் தேசிய மக்கள் சக்திக்கு மலைய மக்கள் வாக்களித்தனர். மக்கள் மத்தியில் இருந்து மலையக பிரதிநிதிகள் நாடாளுமன்றம் வந்தனர். இது இலங்கை அரசியலில் மிக முக்கிய மாற்றமாகும். எங்கள் மீது வைத்த நம்பிக்கையே இது. அந்த நம்பிக்கையை நாம் காப்பாற்றுவோம். அதற்கு எதிராகச் செயற்பட மாட்டோம்.” – என்றார்.

















# சீனாவைச் சென்றடைந்த ஹரிணி

சீன மக்கள் குடியரசின் அழைப்பின் பேரில், 2025 பெண்கள் பற்றிய உலகத் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்பதற்காகப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய இன்று ஞாயிற்றுக்கிழமை சீனாவின் பீஜிங் நகரைச் சென்றடைந்தார்.

பிரதமரைச் சீனத் தேசிய வானொலி மற்றும் தொலைக்காட்சி நிர்வாக அமைச்சர் திருமதி. கவோ ஷுமின் வரவேற்றார்.

இந்த விஜயத்தின் முதல் நாளில், பிரதமர் தடை செய்யப்பட்ட நகரம் மற்றும் சீனப் பெருஞ்சுவர் ஆகியவற்றைப் பார்வையிட்டார்.

யுனெஸ்கோ உலகப் பாரம்பரியச் சின்னங்களான தடை செய்யப்பட்ட நகரம் (அரண்மனை அருங்காட்சியகம்), ஏகாதிபத்தியக் கட்டடக் கலை ஆகியன தேசிய அளவில் பாதுகாக்கப்பட்டு வரும் தொகுப்பாகும். அத்தோடு, சீனாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டுமானக் கலையின் மகிமையை எடுத்துக்காட்டும் சீனப் பெருஞ்சுவரும், சீனாவின் முக்கியமாகப் பாதுகாக்கப்படும் சின்னங்களாகத் திகழ்கின்றன.

சீனாவில் பிரதமர் ஹரிணி, 2025 பெண்கள் பற்றிய உலகத் தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொள்வதுடன், சீன ஜனாதிபதி ஷீ ஜின்பிங் மற்றும் சீன மக்கள் குடியரசின் அரச சபைப் பிரதமர் லீ சியாங் ஆகியோருடன் இருதரப்புக் கலந்துரையாடல்களையும் மேற்கொள்ள இருக்கின்றார்.










# வவுனியா இளைஞர்கள் இருவர் குருநாகல் விபத்தில் உயிரிழப்பு!

குருநாகலில் இடம்பெற்ற வாகன விபத்தில் வவுனியாவைச் சேர்ந்த இளைஞர்கள் இருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

குருநாகல், நாரம்மல, அலஹிட்டியாவ, ஹொரம்பாவ – மாவி எல வீதியில் இன்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த லொறி ஒன்று தொலைதொடர்பு கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.




இதன்போது, லொறியின் பின்புறத்தில் பயணித்த இருவர் தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்தனர்.

அவர்கள் நாரம்மல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

வவுனியா மற்றும் நெடுங்கேணி பகுதியைச் சேர்ந்த 26 மற்றும் 29 வயதுடையவர்களே உயிரிழந்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ள நிரையில், இந்த விபத்து குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மின்சாரம் தாக்கி ஒருவர் மரணம்!

மின்சாரம் தாக்கி ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் இன்று தெரிவித்துள்ளனர்.

வத்தளை, மாபோல பகுதியில் மூன்று மாடிக் கட்டடத்தின் மேற்தளத்தில் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வந்த ஒருவரே மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.



வத்தளை பகுதியைச் சேர்ந்த 55 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. மேற்படி நபர் மூன்று மாடிக் கட்டடத் துக்கு அருகிலுள்ள மின் கம்பி அமைப் பால் மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளா னார் என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

# முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவர் தங்காலையில் துப்பாக்கிகளுடன் கைது!

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களுடன் முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவரைத் தங்காலைப் பிரிவு குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

திஸ்ஸமஹாராம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாமகுலிய குளத்துக்கு அருகிலுள்ள நிலத்தில் நேற்று சனிக்கிழமை நடத்தப்பட்ட சோதனை நடவடிக் கைகளின் போதே அவர் கைது செய்யப் பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 2 உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகள், 11 ரி 56 தோட்டாக்கள், 3 ஆ.16 தோட்டாக்கள் மற்றும் 3 MPMG தோட்டாக்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட நபர், திஸ்ஸமஹாராம பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

காவந்திஸ்ஸபுர – திஸ்ஸமஹாராம பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய முன்னாள் இராணுவச் சிப்பாயே கைது செய்யப்பட்டுள்ளார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளைத் திஸ்ஸமஹாராம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் சக்தியும் இணைவது மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும் என்று நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் இராதாகிருஷ்ணன் எம்.பி. மேலும் கூறியதாவது:–

"ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும், சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் இணைவது காலத்தின் கட்டாயம். இது இதற்கு முன்னரே நடந்து இருக்க வேண்டும். இவ்வாறு நடந்து இருந்திருந்தால் அனைவருக்கும் நன்மை பயக்கும் விடயங்கள் நடந்திருக்கும்.

எனினும், கடந்த காலங்களில் இரு தலைவர்கள் மத்தியிலும் காணப்பட்ட தலைமைத்துவம் உள்ளிட்ட சில முக்கிய விடயங்களில் விட்டுக் கொடுப்பற்ற நிலைமையால் அந்த முயற்சிகள் கைகூட முடியாது போயிருந்தன.

இவ்வாறு இணைந்து இருந்திருந்தால் முன்பு நடைபெற்ற பல்வேறு தேர்தலில் பல வெற்றிகரமாக சம்பவங்களைச் சந்தித்து இருக்கலாம்.

தற்போது எதிர்காலத் திட்டங்கள் தொடர்பில் பல்வேறுபட்ட பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து இரு தரப்பினரும் இணைந்து செயற்பட வேண்டும். அதனை நாம் முழுமையாக வரவேற்பதோடு அனைத்து ஒத்துழைப்புக்களையும் வழங்குவதற்குத் தயாராகவே உள்ளோம். இது விரைவிலேயே நடைபெற வேண்டும் என நாங்கள் இறைவனைப் பிரார்த்தனை செய்கின்றோம்.

அடுத்து வருகின்ற தேர்தல்களைக் கையாள்வதற்கு இவ்விரு கட்சிகளும் இணைந்து உரிய தலைமை வகித்துச் செயற்பட வேண்டியது மிகவும் அவசியமாகும்." – என்றார்.

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணைந்த அரசியல் பயணத்துக்கு ஒப்புதல் அளித்துள்ள நிலையில் எதிர்ப்புப் பேரணிக்கான கூட்டு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்களான நிமல் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர, துமிந்த திஸாநாயக்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோரும் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளனர்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 11 ஆம் திகதி நுகேகொடையில் ஆரம்பிக்கப்படவுள்ள இந்த அரச எதிர்ப்புப் பேரணியை நாடளாவிய ரீதியில் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சுமார் ஒரு வருட கால இடைவெளிக்குப் பிறகு ஆளும் தேசிய மக்கள் சக்தி அர சாங்கத்துக்கு எதிராக எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து எதிர்ப்புப் பேரணியை நடத்தத் திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# செல்வபுரம் குடிதண்ணீர் தட்டுப்பாட்டை நீக்க முன்னாள் பொலிஸ் ஊழியர்கள் உதவி!

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால பங்கேற்பு

( வி.ரி. சகாதேவராஜா)

பொத்துவில் கோமாரி, செல்வபுரம் கிராமத்தில் மிக நீண்ட காலமாக நிலவிவரும் குடி தண்ணீர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் பொருட்டு பொலிஸ் திணைக்களத்தின் ஓய்வுபெற்ற ஊழியர்கள் உதவி செய்துள்ளனர்.

இதன் அங்குரார்ப்பண விழாவில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.அப்துல் வாஸித், பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனரத் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

பொலிஸ் திணைக்களத்தின் ஓய்வு நிலை ஊழியர்களின் நிதியின் ஊடாக அமைக்கப்பட்ட 5000 லீற்றர் சுத்திகரிக் கப்பட்ட குடி தண்ணீர் தொகுதி மக்கள் பாவனைக்காக நேற்று முன்தினம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவால் திறந்து வைக் கப்பட்டது.



இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் உயர் அதிகாரிகள் உட்பட தேசிய மக்கள் சக்தியின் பொத்துவில் பிரதேச முக்கி யஸ்தர்கள் உட்பட பொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## உருத்திராட்சப் பூனை

இதற்கு முன்னர் ஆட்சியில் இருந்த அரசுகளைக் குறை சொல்வது, அதிகாரத்துக்கு வந்த - புதிய அரசுகளின் - தரப்புகளின் - வழமையான பண்பியல்புதான்.

அதை மட்டுமே அரசியல் மூலதனமாகக் கொண்டு தன்னுடைய ஆட்சி அதிகாரத்தை முன்னெடுக்க இப்போதைய தேசிய மக்கள் மத்திய அரசு முயல்வதாகத் தோன்றுகின்றது.

ஜெனிவாவில் அண்மையில் நடந்து முடிந்த ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் அறுபதாவது அமர்வில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து தேசிய மக்கள் சக்தி அரசின் சார்பில் இப்போது அளிக்கப்படுகின்ற பதில்கள், விளக்கங்கள் அதனைத்தான் எடுத்துக் காட்டுகின்றன.

''ஜெனிவா செயல்முறைக்கு வழிவகுத்த தேசியப் பிரச்சினைகளை திறம்பட தீர்க்க முந்தைய அனைத்து அரசாங்கங்களும் தவறிவிட்டன. அடுத்தடுத்த அரசாங்கங்களின் இந்தத் தோல்வியே, பதினாறு ஆண்டுகளுக்கும் மேலாக மனித உரிமைகள் கவுன்ஸில் இலங்கை தொடர்பான தீர்மானங்களை தொடர்ந்து நிறைவேற்றுவதற்கான முக்கிய காரணமாகும்.

''போர் முடிந்த உடனேயே நம்பகமான தேசிய பொறிமுறையை அமைப்பதன் மூலம் தீர்க்கப்படக்கூடிய ஜெனிவாப் பிரச்சினை, குறுகிய அரசியல் நோக்கங்கள் மற்றும் குறுகிய பார்வை கொண்ட தலைமைத்துவம் காரணமாக அது சர்வதேசமயமாக்கப்பட்டு விட்டது.''- இப்படித் தத்துவம் பிளந்து இருக்கிறது தேசிய மக்கள் சக்தி அரசு.

ஏதோ யுத்தம் முடிவடைந்த காலத்தில் தாங்கள் ஆட்சி அதிகாரத்தில் இருந்திருந்தால் நம்பகரமான தேசிய பொறிமுறையை அமைத்து இப்பிரச்சினையை அப்போதே சுமுகமாகத் தீர்த்திருப்பார்கள் என்று கயிறு விடுகிறது இந்த அதிகாரத் தரப்பு.

யுத்தகாலத்திலும், அது முடிவடைந்த காலத்திலும் முழு அளவில் பௌத்த - சிங்கள பேரினவாதத்தை கக்கிக் கொண்டிருந்த பிரதான தரப்பே இன்றைய தேசிய மக்கள் சக்தியின் முக்கிய பங்காளிகளான ஜே.வி.பியினர்தான்.

இலங்கைப் படையினருக்கு எதிராக விசாரணை ஏதும் நடத்த மாட்டோம், நடத்தக் கூடாது என்று நேற்று வரை ஒரே குரலில் பேரினவாத மேலாதிக்கத்தை வலிமைப்படுத்தி, உறுதிப்படுத்தி, ஒலித்துக் கொண்டிருந்த தேசிய மக்கள் சக்தி, இப்போது நம்பகமான தேசிய பொறிமுறை அமைப்பதன் மூலம் பிரச்சினையைத் தீர்ப்பது பற்றிப் பேசுவது உருத்திராட்சப் பூனையின் உபதேசமாகவே தெரிகிறது.

முன்னைய அரசுகள் நம்பகமான தேசிய பொறிமுறையை அமைக்கத் தவறியமை குறித்து இப்போது, தான் நல்ல வேடம் போட்டு தத்துவம் உபதேசிக்கும் தேசிய மக்கள் சக்தி, தன்னுடைய ஆட்சிக் காலத்தில் கூட, இவ்விவகாரத்தில் பாதிக்கப்பட்ட தமிழர் தரப்புக்கு நம்பிக்கை தரக்கூடிய தேசிய பொறிமுறையை அமைக்க மாட்டாது என்பது உறுதியானது. தெளிவானது. வேண்டுமானால் சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காக ஒரு கபட நாடகத்தை இந்த அரசாங்கம் இது விடயத்தில் அரங்கேற்ற முடியும். அவ்வளவே.

ஆனால் பாதிக்கப்பட்ட தமிழர்களைப் பொறுத்தவரை சர்வதேச நியமங்களுக்கு அமைவான விசாரணைப் பொறிமுறை ஒன்றே உண்மைகளைக் கண்டறிந்து, பொறுப்புக்கூறலை நடைமுறைப்படுத்தி, நீதியை நிலைநாட்டும் என்பது அவர்களது அசையாத நம்பிக்கையாகும். உறுதியான நிலைப்பாடாகும்.

இதுவரை காலமும் இருந்த அரசுகளை குற்றம் சுமத்திக் கொண்டு, இந்த அரசு தமிழர்களின் காதில் சுற்றக் கூடிய பூவை நம்பி ஏமாறுவதற்கு தமிழர்கள் ஒன்றும் முட்டாள்கள் அல்லர்.






# உலக உளநல தின நிகழ்வு முல்லைத்தீவில்!

(த.சுபேசன்)

முல்லைத்தீவு பாலிநகர் மகா வித்தியாலய பாடசாலையும் கிளாரட் சிறுவர் கதம்பமும் இணைந்து உலக உளநல தின நிகழ்வை வெள்ளிக்கிழமை முன்னெடுத்திருந்தன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளாரட் சிறுவர் கதம்ப இயக்குநர் அருட் தந்தை அல்பேர்ட் ஜோ. அருள்ராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக சேவைக்காக ஆசிரிய ஆலோசகர் திருமதி. ஜெயராகினி பாலச்சந்திரன், ஓய்வுநிலை ஆசிரியர் திருமதி. புவனேஸ்வரி யோகானந்த ராசா ஆகியோரும் கலந்து கொண்டனர்.





# நெடுஞ்சாலைகள் அமைச்சின் நிதி அதிகாரியாக பரமேஸ்வரன்



(எஸ். கீதபொன்கலன்)

திருகோணமலையைச் சேர்ந்த, இலங்கை கணக்காளர் சேவையின் சிரேஷ்ட அலுவலர் ந.பரமேஸ்வரன் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பிரதான நிதி அதிகாரியாக வெள்ளியன்று (10) தமது கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இலங்கை கணக்கியலாளர் சேவை அதிகாரியாகத் தெரிவு செய்யப்பட்ட காலம் முதல் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு உட்பட்ட மாவட்ட செயலகங்களில் கணக்காளராக மற்றும் பிரதான கணக்காளராகக் கடமையாற்றி இருந்த இவர் தற்போது முதற்தடவையாக மத்திய அமைச்சொன்றின் உயர் அலுவலராக நியமிக்கப்பட்டு கடமை ஏற்றுள்ளார்.




# தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடந்த பயிற்சிப் பட்டறை

ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிப் பட்டறையொன்றை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் நேற்றையதினம் முன்னெடுத்திருந்திருந்தது.

இந்தப் பயிற்சிப்பட்ட கொழும்பு – 5இல் அமைந்துள்ள இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் ‘ஒருங்கிணையும் ஊடகத்துறை: வாய்ப்புக்களும் சவால்களும்’ என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடத்தின் பீடாதிபதியும் ஊடகக் கற்கைகள் துறைத் தலைவரும் பேராசிரியருமான சி.ரகுராமும், செயற்கை நுண்ணறிவு தொடர்பில் ஊடகவியலாளர் அருண் ஆரோக்கியநாதனும் மற்றும் ‘இதழியலில் செயற்கை நுண்ணறிவும் சவால்களும் : கோட்பாட்டு ரீதியான கரிசணைகளும்’ என்ற தலைப்பில் சட்டத்தரணியும் ஊடகப் பயிற்றுவிப்பாளருமான பெனிஸ்லஸ் துஷானும் விளக்கங்களையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டனர்.

இந்தப் பயிற்சி பட்டறையில் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் சிறிகஜன், செயலாளர் ஜெயந்திரன் மற்றும் போஷகர் நிக்ஸன், மூத்த பத்திரிகையாளர் அனந்த பாலகிட்னர் உட்பட பல்வேறு பிரதேசங்களை பிரதிநிதித்துவபடுத்தும் தமிழ் ஊடகவியலாளர்களும் உள்ளிட்டோரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

















# யாழ். மாநகரசபையால் வீதிகள் புனரமைப்பு முதல்வர் மதிவதனி ஆரம்பித்து வைத்தார்!

யாழ். மாநகரசபையின் 02 ஆம் வட்டாரம் கலட்டி அம்மன் வீதி வேலைகளை யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி வி.மதிவதனி வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

02 ஆம் வட்டாரத்தின் ஜனநாயக தமிழ்த்தேசியக்கூட்டணியின் யாழ். மாநகர சபை உறுப்பினர் ப. தர்சானந்தின் அழைப்பின்பேரில் கலந்துகொண்ட முதல்வர் திருமதி வி.மதிவதனி, வீதி வேலைகளை ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வில் வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் நந்த கோபாலன், யாழ்.மாநகரசபை பிரதி மேயர் இ.தயாளன், யாழ்.மாநகரசபையின்மராமத்துக்குழுத்தலைவர்ஜெ.மயூரன் மற்றும் வட்டார உறுப்பினர் ப. தர்சானந் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட பீடி இலைகள், சிகரெட் மீட்கப்பட்டன!





**(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)**

இந்தியாவில் இருந்து கடல் வழியாக சட்டவிரோத நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட 1324 கிலோகிராம் பீடி இலைகளையும், வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 90,000 சிகரெட்டுகளையும் மாரவில பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

மாரவில, முடுகடுவ பகுதியில் வெள்ளிக்கிழமை (10) அதிகாலை இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கை இடம் பெற்றுள்ளது.

பீடி இலைகள் 34 பொலிதீன் பைகளில் அடைக்கப்பட்டிருந்துள்ளன. 450 சிகரெட் பண்டல்களில் சிகரெட் மீட்கப்பட்டுள்ளது.

பீடி இலைகள் மற்றும் சிகரெட்டுகள் 04 சிறிய படகுகளில் நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. சுற்றிவளைப்பின்போது சந்தேக நபர்கள் தப்பி ஓடிவிட்டனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பறிமுதல் செய்யப்பட்ட பீடி இலைகள் மற்றும் சிகரெட்டுகள் வென்னப்புவ, வைகாலில் உள்ள கலால் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்படவுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.



# சாய்ந்தமருது சுகாதார அதிகாரி பிரிவில் தாய், சேய் நல மேம்பாட்டு நடவடிக்கை

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தாய் மற்றும் சேய்நல மேம்பாட்டை கருத்தில் கொண்டு, பொது சுகாதார மருத்துவ மாதுக்களிடம் இருந்து வினைத்திறன் மிக்க சேவையைப் பெற்றுக் கொள்வதற்கான பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இத்திட்டம், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி சகிலா இஸ்ஸதீனின் ஆலோசனையின் அடிப்படையில், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதன் தலைமையில் நடைமுறைப் படுத்தப்பட்டது.

இதன் ஒரு பகுதியாகச் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடமையாற்றும் பொது சுகாதார மருத்துவ மாதுக்களுக்கான வாராந்த பயிற்சி நெறி நடைபெற்றது. இந்தப் பயிற்சியின் போது மார்பகப் புற்றுநோய் தொடர்பான வினாக்கொத்து நிகழ்வும் இடம்பெற்றது.

இந்தப் பயிற்சியில் சிறந்த திறமையை வெளிப்படுத்தி அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற பொதுச் சுகாதார மருத்துவ மாது எம்.எஸ்.எஸ். பரீனாவுக்கு, சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் சார்பில் பாராட்டுக்களை தெரிவிக்கப்பட்டன.






# அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஏற்பாட்டில் சம்மாந்துறை வலய மாணவர்களுக்குக் கௌரவம்!

(நூருல் ஹுதா உமர்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கல்வி பிரிவின் ஏற்பாட்டில் க.பொ.த. சாதாரண தரத்தில் 9ஏ சித்திகள் மற்றும் க.பொ.த. உயர்தரத்தில் 3ஏ சித்திகளை பெற்ற சம்மாந்துறை வலய மாணவர்களையும் பெற்றோர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (10) சம்மாந்துறை மஜீட் மண்டபத்தில் சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஐ.எல். மாஹிர் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன், கட்சியின் தேசிய அமைப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர், சம்மாந்துறை வலயக்கல்வி பணிப்பாளர், மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாளர் ரிஸ்லி முஸ்தபா உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.











# திறமையுடன் பிரகாசிப்போம் எனும் கருப் பொருளில் மகளிரின் பெருமை - விவசாய கண்காட்சி 2025

இலங்கை விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் டாக்டர் டபிள்யூ. ஏ. ஆர். ரி. விக்கிரமராச்சி தலைமையில் “திறமையுடன் பிரகாசிப்போம்” எனும் கருப் பொருளிலான மகளிரின் பெருமை – விவசாய கண்காட்சி, நேற்று முன்தினம் கன்னொருவை, போராதனை தாவர பிறப்புரிமை மூலவளங்கள் நிலைய வளாகத்தில் இடம்பெற்றது.

மகளிர் விவசாய அமைப்புகளை வலுப்படுத்தல் மற்றும் மகளிர் விரிவாக்க பிரிவு மற்றும் பயிற்சிமைய அதிகாரிகளைப் பாராட்டுதல் எனும் நோக்கங்களை உள்ளடக்கியதாக இலங்கையின் 25 மாவட்டங்களும் போட்டியிடும் வகையில் இது இடம்பெற்றது.

இக்கண்காட்சியில் 05 போட்டிகள் இடம்பெற்றன.

மட்டக்களப்பு மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் பிரதி விவசாயப் பணிப்பாளர் ஆ.பரமேஸ்வரனின் ஆலோசனை மற்றும் சிறந்த வழிகாட்டுதலுடன் பண்ணை பெண்கள் விரிவாக்க அபிவிருத்தி பாட விதான உத்தியோகத்தர் குந்தவை ரவிசங்கரின் மேற்பார்வையில் மட்டக்களப்பு கல்லடியைச் சேர்ந்த சு.கோகிலா மகளிர் சமூகங்களில் இருந்து உருவான சிறந்த பெண் தொழில் முனைவோர் எனும் பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்று மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்களத்துக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

இதற்காக மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்களத்தின் பிரதி விவசாய பணிப்பாளர் ஆ.பரமேஸ்வரன் மற்றும் விவசாய பேதனா ஆசிரியர் ஏ.ஐ. முர்சிதா ஆகியோர் இதற்கான பூரண ஒத்துழைப்புகளை வழங்கியிருந்தனர்.






# உலக மனநல விழிப்பூட்டும் நிகழ்வு சாய்ந்தமருதில்

(நூருல் ஹுதா உமர்)

உலக மனநல தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருது சமுர்த்தி வங்கிச் சங்கத்தில் பெண்களுக்கான விழிப்பூட்டும் நிகழ்வு சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி வங்கிச் சங்க சமூக அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜஃபரின் நெறிப்படுத்தலில் தலைமைப் பீட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சி.ஏ. நஜீம் தலைமையில் இடம்பெற்றது.



இதில் சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் றியாத் ஏ.மஜீத், கருத்திட்ட முகாமையாளர் எஸ்.றிபாயா, சிரேஷ்ட மனநல ஆலோசகரும் சமுர்த்தி கருத்திட்ட உதவியாளருமான என்.எம். நௌஸாத், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எப். றிகாஸா ஷர்பீன், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ. எல்.முஸ்பீரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

உலக மனநல தினத்தைப் பற்றிய விரிவுரையை மனநல உத்தியோகத்தர் எஸ் எச்.எம்.சியாம் நிகழ்த்தினார்.

# தனியார் பஸ்களில் பயணிகளுக்கு பயண சீட்டு வழங்கப்படுவதில்லை!

**(மஸ்கெலியா)**

மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் சேவையில் ஈடுபட்டுவரும் தனியார் பஸ்களில் பயயணிகளுக்குப் பயணச் சீட்டு வழங்கப்படுவதில்லை எனவும் ஒரு சில பஸ்களில் பயணிகளிடம் இருந்து அதிகளவு கட்டணம் அறவீடு செய்யப்படுகிறது என்றும் பயணிகள் புகார் தெரிவித்தனர்.

சாமி மலை மஸ்கெலியா, சாமி மலை ஹட்டன், மஸ்கெலியா ஹட்டன், மஸ்கெலியா மறே, மஸ்கெலியா நல்லதண்ணி, மஸ்கெலியா ஹப்புகஸ்த்தனை, மஸ்கெலியா காட் மோர் ஆகிய சாலையில் சேவையில் ஈடுபட்டு வரும் தனியார் பஸ்களில் பயணிகளுக்கு பயண சீட்டு வழங்கப்படுவது இல்லை என புகார் தெரிவித்தனர்.

அத்துடன் மஸ்கெலியா பஸ் நிலையத்தில் இருந்து ஆரம்பிக்கும் தனியார் பஸ் சேவைகள் மஸ்கெலியா நகரில் ஐந்து இடங்களில் தரித்து நின்று சுமார் ஒரு மணி நேரம் ஆமை வேகத்தில் மஸ்கெலியா நகரை விட்டு வெளியே செல்கிறது.

இது குறித்து மத்திய மாகாண போக்குவரத்து சபை அதிகாரிகள் உடன் கவனம் செலுத்தி இனி வரும் காலங்களில் முறையான சேவைகள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் குறித்த நேரத்தில் பஸ்கள் நகரை விட்டு வெளியே செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# புத்தளம் கொத்தாந்தீவு முஸ்லிம் ம.வி. நாடகப் போட்டியில் தேசிய மட்டத்துக்கு!

(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)



புத்தளம் கொத்தாந்தீவு முஸ்லிம் மகா வித்தியாலய மாணவிகள் இஸ்லாமிய கலாச்சார நாடகப் போட்டியில் மாகாணம் மட்டத்தில் முதலாம் இடத்தைப் பிடித்து தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டு பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர் என்று பாடசாலையின் அதிபர் ஐ. என். எம். எம். லாஹிர் தெரிவித்தார்.

இஸ்லாமிய கலாச்சார நாடகப் போட்டியின் மாகாண மட்ட போட்டிகள் கடந்த (09) வியாழக்கிழமை கெகுணுகொள்ள தேசிய பாடசாலையில் இடம்பெற்றது.

இஸ்லாமிய கலாச்சார நாடகப் போட்டியில் மாணவிகளான எம். என். எப். நமா, எம். எச். எப். இஷாமா, எம். ஆர். எப். சம்ஹறா, எம். எப். எப். பஸீஹா, என். மஹ்ரா பர்வீன், பீ. எப். அப்ரின், எம். எப். எப். பஹ்மா, எம். என். எப். நுஹா ஆகியோரையும், நாடகத்தை எழுதி, மாணவிகளை பயிற்றுவித்து வெற்றி பாதைக்கு வழிகாட்டிய பாடசாலையின் ஆங்கிலப் பாட ஆசிரியரான எம். எச். எம். அமீர் அலி மற்றும் இணைப்பாட விதான ஆசிரியர் ஏ. எம். எப். றிஹாயா, எப். நளீபா ஆகியோரையும் பாடசாலை நிர்வாகம் வாழ்த்தியுள்ளது.






# சிறுவர்களின் விருத்தியை பாதிக்கும் உளவியல்...!

“குழந்தை என்பது வளர்ந்து வரும் உயிர். உளவியல் என்பது அந்த வளர்ச்சியின் உள்ளார்ந்த இரகசியங்களைத் திறக்கும் சாவி. இரண்டும் இணையும் போது தான் மனித வாழ்வின் முழுமை வெளிப்படும்.”

“சிறுவர் விருத்தி என்பது உடல், அறிவு, உணர்ச்சி, மொழி மற்றும் சமூக திறன்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சி ஆகும். அதாவது, பிறந்த நாள் முதல் முதிர்வடைதல் வரை குழந்தை அடையும் வளர்ச்சி அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு பரந்த செயல்முறை தான் சிறுவர் விருத்தி. இது கல்வி, குடும்பம், சமூக சூழல், உணவு, உடல் நலம், உளவியல் நிலை, மற்றும் பண்பாட்டு காரணிகள் போன்றவற்றால் நிர்ண யிக்கப்படுகிறது.

ஒரு குழந்தை உடல் ரீதியாக மாத்திரம் வளர்ச்சி அடைந்தால் போதும் பிள்ளை வயதுக்கு ஏற்ற விருத்தியை அடைந்து கொள்ளும் என்பதே இன்றைய பெற்றோர்களின் எண்ணம். ஆனால் ஒவ்வொரு பிள்ளையின் உடைய விருத்திப் பாதையிலும் உளவியலுக்கு பிரதான பங்கு உண்டு என்பதை அவர்கள் அறிவதில்லை. தற்காலத்தில் குழந்தைகள் எண்ணிலடங்கா உளவியல் சார் பாதிப்புகளை அனுபவிப்பதால் பிள்ளைகளின் விருத்திப் பாதை முடக்கப்படுகின்றது. இதனைக் கர்ப்ப கால சூழ்நிலை மற்றும் கர்ப்பத்துக்குப் பிற்பட்ட சூழ்நிலை என்று நோக்கலாம்.

கர்ப்ப காலத்தில் தாய் அனுபவிக்கும் உளவியல் சார் தாக்கங்கள் கூட குழந்தை விருத்தியைப் பாதிக்கலாம். குறிப்பாக இந்தக் காலத்தில் ஏற்படும் பயம், இசைவாக்கம் இன்மை, குடும்ப உறவுகளின் தாக்கம், சமூக வன்முறைகள், மன அழுத்தங்கள் மற்றும் தவறான பழக்க வழக்கங்கள் நேரடியாக வயிற்றில் உள்ள பிள்ளையின் விருத்தியை பாதிக்கக்கூடும். உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆய்வு மதிப்பீட்டின் படி 2020 ஆண்டில் மட்டும் 13.4 மில்லியன் குழந்தைகள் குறை பிரசவத்தில் பிறந்துள்ளனர்.

மேலும் குழந்தைகள் பிறப்பின் பின் அவர்களுக்கு ஏற்படக்கூடிய நோய் நிலைமைகள் கூட அவர்கள் விருத்தியை நேரடியாக பாதிக்கின்றது. குறிப்பாக நியூமோனியா, வயிற்றுப்போக்கு மலேரியா தட்டம்மை போன்ற பல நோய் நிலைமைகளால் இலங்கையில் வாழும் ஐந்து வயதுக்கு உட்பட்ட பல குழந்தைகள் தீவிரமாக பாதிப்படைகின்றனர். உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிக்கை படி 2022 இல் 619000 சிசு மரணங்கள் மலேரியாவால் ஏற்பட்டுள்ளமை அறிய முடிகின்றது. மேலும் சிறுவர்களின் வளர்ச்சியில் ஊட்டச்சத்து குறைபாடும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. குறிப்பாக உடல் ரீதியாக ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்படுகின்ற போது உளவியல் பாதிப்படைகின்றது. இதனால் பிள்ளைகளின் விருத்தி தடைப்படுகின்றது .

குழந்தைகளுக்கு ஏற்படுகின்ற மன அழுத்தம், குறிப்பாகக் குழந்தைகளை கடுமையாகத் தண்டித்தல், வன்முறையைப் பிரயோகித்தல், பிள்ளைகளை ஒதுக்குதல், பாரபட்சம் காட்டுதல் மற்றும் வறுமை போன்ற பல விடயங்கள் மன அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன.

இதன் மூலம் பிள்ளைகளுடைய ஆளுமைகள் தடைபட்டு கல்வியில் பின்னடைவு ஏற்படுகின்றது. மேலும் குழந்தைகள் அனுபவிக்கும் பாலியல் ரீதியான வன்முறைகள் குறிப்பாக வீடுகள் மற்றும் நெருங்கிய உறவுகளால் இது அதிகம் ஏற்படுத்தப்படுகின்றன. இதனால் பிள்ளைகளில் தனிமை,பயம்,வெறுப்பு, பிற்பட்ட பாலியல் கோளாறுகள், எதிர்கால வாழ்க்கையும் கேள்விக் குறியாகின்றன.

மேலும் குழந்தைகள் தங்கள் பாதுகாப்பின் அடித்தளங்களாக பெற்றோர்களையே நம்பி உள்ளனர். பெற்றோர்கள் அவற்றினை சரியான முறையில் பிள்ளைகளுக்கு வழங்காத இடத்து பிள்ளைகள் உளவியல் அடிப்படையில் பாதிக்கப்படுகின்றனர். குறிப்பாக பெற்றோர்கள் இருவரும் வேலைகளுக்கு செல்லுதல், பிள்ளைகளுக்கு உரிய பராமரிப்பின்மை, பெற்றோர்கள் வெளிநாட்டில் வசித்தல், சர்வாதிகார போக்கு, அதிகளவு தண்டனை மற்றும் தீய வார்த்தை பிரயோகங்கள் என அனைத்தும் உடல் ரீதியாகவும் உள சமூக ரீதியாகவும் பாதிப்பை ஏற்படுத்திவிடுகின்றன. தற்காலம் குழந்தைகளுக்கு தொலைபேசியை பார்த்து உணவை ஊட்டும் காலமாக மாறிவிட்டது. அதிகரித்து வரும் ஊடகப் பாவனை பிள்ளைகளிடத்தில் பல உளவியல் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. குறிப்பாக பிள்ளைகள் ஊடகத்தை பார்த்து அதே போல தானும் செயற்படுதல், வயதுக்கு மீறிய விடயங்களை அனுப்புதல், உடல் ரீதியாக பல நோய்கள் மற்றும் பயம்,வன்முறை போன்ற உளவியல் மாற்றங்களும் ஏற்படுகின்றன. இது பிள்ளைகளின் ஆரோக்கியமான விருத்திப் பாதையில் பிரதான தடையை ஏற்படுத்துகின்றது.

தொடர்ச்சி▼

# சிறுவர்களின் விருத்தியை பாதிக்கும் உளவியல்...!

தொடர்ச்சி▼

பிரேசில்,சீனா,இந்தியா பாகிஸ்தான் போன்ற நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 5-6 வயதுடைய 68 வீதமான குழந்தைகள் சிகரெட்டை அடையாளம் காட்டக்கூடிய வகையில் உள்ளனர்.

அடுத்து பிள்ளைகளுடைய குடும்ப சூழல். அதாவது குழந்தை குடும்பத்திலிருந்து பெற்றுக் கொள்ளும் அனுபவம், குடும்பத்தில் பயன்படும் வார்த்தை பிரயோகம், குடும்பத்தின் கல்வி மட்டம், குடும்பத்தில் பயன்படுத் தப்படும் ஒழுக்கவியல் நடைமுறைகள் போன்ற சிறிய சிறிய விடயங்கள் கூட பிள்ளையின் மனநிலையில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

இவை அனைத்தும் சிறப்பாக அமையும் குடும்பத்தில் வளரும் குழந்தைகள் நேரான விருத்தியை அடைந்து கொள்வர். அத்துடன் பிள்ளைகள் குடும்பத்தைத் தாண்டி அதிகளவு நேரத்தைச் செலவிடும் இடமாகப் பள்ளியும் நண்பர்களும் காணப்படுகின்றனர். பாடசாலை நடைமுறைகள் மற்றும் நண்பர்களின் செயல்பாடுகள் பிள்ளையின் உளநிலையில் தாக்கத்தை ஏற்படுத்தும். எடுத்துக்காட்டாக – ஒரு நல்ல நண்பர் வட்டாரத்தோடு இணையும் குழந்தை ஆரோக்கியமான மனநிலையை பெற முடியும். இது பிள்ளையின் விருத்தியை நேரான முறையில் நகர்த்தும்.

பெற்றோர்களின் போதைப்பொருள் பயன்பாடு பிள்ளைகளின் விருத்தியை பாதிக்கின்ற முதன்மையான காரணியாகும். இதன் மூலம் பிள்ளைகளின் அடிப்படை வசதி பற்றாக்குறைகள் ஏற்படுதல், பிள்ளைகள் உணர்ச்சி ரீதியாக பாதிக்கப்படுதல் மற்றும் பள்ளி வருகை, கல்வி மட்டும் அடைவு மட்டம் என அனைத்துமே பாதிப்படைய கூடும். ஞேனுருர் ஆய்வின்படி 0-2 வயதுடைய 1.2 மில்லியன் குழந்தைகள் மது அருந்தல் கோளாறு உடைய பெற்றோர்களின் கீழ் வாழ்வதாக நிரூபிக்கப்பட்டது.

ஒன்றிய காலகட்டத்தில் பல பிள்ளைகள் பொருளாதார சிக்கல்கள் காரணமாக பல உளவியல் பாதிப்புகளை அனுபவிக்கின்றனர். குறிப்பாக உணவு, உடை, வாழ்விடம், கல்வி என அனைத்தும் போராடி பெற வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்படுகின்றனர். ஐக்கிய நாடுகள் சபையின் ஆய்வு படி 333 மில்லியன் குழந்தைகள் மிகவும் வருமானம் குறைந்த குடும்பத்தில் உள்ளனர். பிள்ளைகள் கொண்டுள்ள உணர்ச்சி கையாளும் முறைகள் கூட பிள்ளைகளின் விருத்தியைப் பாதிக்கக்கூடும். குறிப்பாக அன்பு, பாசம், பாதுகாப்பு உணர்வு, பயம், கோபம், மகிழ்ச்சி போன்ற உணர்வுகள் குழந்தையின் மனநிலையை அமைத்து, அவர்களின் சமூகமும் கல்வி வளர்ச்சியையும் பாதிக்கின்றன.

இவ்வாறு உளவியல் காரணிகள் தானே எனப் பொருட்படுத்தாமல் விடுகின்ற போது அது நேரடியாக உடல் சமூக மற்றும் அவர்களுடைய கல்வி அறிவாற்றலை முழுமையாக பாதிப்பை ஏற்படுத்துகின்றது.பிள்ளைகளின் உளவியல் விருத்தியை பாதிக்கும் எதிர்மறை விளைவுகளை குறைப்பதற்காக பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் அன்பும் பாதுகாப்பும் நிறைந்த சூழலை உருவாக்கி, சரியான உணர்ச்சி ஆதரவை அளித்து, குழந்தையின் சிந்தனை மற்றும் கற்றலை ஊக்குவிக்கும் கல்வி முறைகளைப் பயன்படுத்தி, சமூக உறவுகளை ஆரோக்கியமாக வளர்க்க உதவி செய்து, தேவையான இடங்களில் ஆலோசனை மற்றும் உளவியல் உதவிகளை வழங்கி, ஊக்கம், பாராட்டு, சுயநம்பிக்கை ஆகியவற்றை வளர்க்கும் வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும். மேலும் பிள்ளைகளின் ஊட்டச்சத்து மீது கவனம் செலுத்தி நோயற்ற நிலையை உறுதிப்படுத்த வேண்டும். குறைந்த வருமானம் தரும் குடும்பங்களுக்கு பொருளாதார ரீதியான உதவிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.



**சரண்யா பாலகுமார்**
உளவியல் துறை சிறப்பு கலை,
யாழ்.பல்கலைக்கழகம்.





# சிறுவர் அபிவிருத்தி மற்றும் பால்நிலை அடிப்படையிலான உள சமூகக் கூட்டம்

(ஏ.எச்.எம்.ஹாரீஸ்)

2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டுக்கான பிரதேச மட்ட சிறுவர் அபிவிருத்தி, பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் மற்றும் உளச் சமூக ஒன்றிய கூட்டமானது நாவிதன் வெளி பிரதேச செயலாளர் ராகுலநாயகி சஜிந்ரன் தலைமையில் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சிறுவர் மற்றும் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. சமூகத்தில் அவர்களின் பங்கு மிக முக்கியமானது என்ற வகையில் பிரச்சினைகளை எதிர்கொள்ள எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டு அது தொடர்பிலான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.



இந்த நிகழ்வுக்கான நிதி பங்களிப்பை சிறுவர் நன்னடத்தை திணைக்களம் வழங்கியிருந்தது.

இந்த நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் சீ. நிருபா, சமுர்த்தி தலைமையக முகாமையாளர் செ. சிவம், நிர்வாகக் கிராம அலுவலர் மனோஜ் இந்ரஜித், நாவிதன்வெளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அரச நிறுவனங்களான கோட்டக்கல்வி அலுவலகம், சுகாதார வைத்திய பணிமனை, சிறுவர் நன்னடத்தை அலுவலகம் போன்றவற்றின் பிரதிநிதிகளும் கல்முனை ஆதார வைத்தியசாலை உளநல பிரிவு மற்றும் சிறுவர் நன்னடத்தை பிரிவு உத்தியோகத்தர்கள் ஆகியோரும் அரச சார்பற்ற நிறுவனங்களான ஸ்வாட், இஸ்லாமிக் ரிலீப் போன்றவற்றின் உத்தியோகத்தர்களும் நாவிதன்வெளி பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.






# பேரழிவை எதிர்கொள்ளப்போகும் மன்னார்!

“மண்ணின் மைந்தர் வாழ்வு சுமக்கும் மன்னாரே!
தேசம் உன்னில் ஏவுதே புதுக்காற்றாலைப் போரை”

இலங்கையின் எரிசக்தித் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, மன்னார் தீவில் முன்னெடுக்கப்படும் பாரிய காற்றாலை மின் உற்பத்தித் திட்டம், ஒருபுறம் நாட்டின் நிலையான வளர்ச்சிக்குத் துணை நிற்பதாக அரசால் கூறப்பட்டாலும், மறுபுறம் அப்பிராந்தியத்தின் தனித்துவமான சூழலியல் அமைப்புக்கும், அங்கு வாழும் மக்களின் பாரம்பரிய வாழ்வாதாரத்துக்கும் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது. பசுமை ஆற்றலை நோக்கிய இந்தப் பயணம், உள்ளூர் சமூகங்களின் மீதும் இயற்கையின் மீதும் ஏற்படுத்தும் எதிர்மறைத் தாக்கங்கள் குறித்துச் சூழலியல் ஆர்வலர்களும், பொதுமக்களும் எழுப்பும் கேள்விகள் மிக முக்கிய மானவை.

மன்னார் பிரதேசம் சர்வதேச அளவில் முக்கியமான ஒரு பறவைகள் வலசை செல்லும் பாதையாகும். உலகின் சுமார் 15 மில்லியன் இடம்பெயரும் பறவைகள் பயன்படுத்தும் மத்திய ஆசியப் பறக்கும் பாதையின் (Central Asian Flyway - CAF) முக்கிய நுழைவாயிலாகவும், குளிர்கால வாழிடமாகவும் மன்னார் விளங்குகிறது. மன்னாரில் திட்டமிடப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான இராட்சத காற்றாலை விசையாழிகள், இந்த வலசைப் பறவைகளுக்கு ஒரு “மரணப் பொறியாக” மாறும். ஏனெனில் விசையாழிகளின் இறக்கைகளில் மோதி, இலட்சக்கணக்கான பறவைகள் பலியாகும் அபாயம் காணப்படுகிறது. மேலும் இந்தத் திட்டங்கள் வங்காலைப் பறவைகள் சரணாலயம் (Ramsar Wetland), மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்கு மிக அருகில் அமைக்கப்படுவதால், அரிய வகை மற்றும் அச்சுறுத்தலுக்கு உள்ளான இனப்பெருக்க வாழ்விடங்களும் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

காற்றாலைத் திட்டத்தின் சுற்றுச்சூழல் பாதிப்புகள் பறவைகளைத் தாண்டி அப்பகுதியின் நிலவியலையும், அங்கு வாழும் மனிதர்களின் வாழ்க்கையையும் நேரடியாகத் தாக்குகின்றன.

மன்னார் நிலப்பரப்பு கடல் மட்டத்திலிருந்து மிகக் குறைந்த உயரத்தில் உள்ளது. காற்றாலைக் கோபுரங்களை அமைப்பதற்காக நிலத்தை ஆழமாகத் தோண்டுவது, நில மட்டத்தை மேலும் தாழ்த்தி, கடலோரப் பகுதிகள் சில வருடங்களிலேயே கடல் நீருக்குள் மூழ்கும் பாரிய அபாயம் ஏற்படும்.

மன்னார் மக்களின் பொருளாதாரம் பெரும்பாலும் மீன்பிடி, விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பை நம்பியுள்ளது. காற்றாலைகளை அமைப்பதற்கான நிலம் கையகப்படுத்தப்படுதல் மற்றும் கட்டுமானப் பணிகளால், உள்ளூர் மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடிக் கடற்கரைகள் மற்றும் விவசாய நிலங்கள் பறிபோகும் நிலை உள்ளது. ஏனெனில் இரண்டாம் கட்டத் திட்டங்கள் சில மக்கள் குடியிருப்புகளை அண்மித்தே திட்டமிடப் பட்டுள்ளது.

அத்துடன் காற்றாலைகளின் நிரந்தர இரைச்சல் (Noise Pollution) மற்றும் காந்தப்புலங்கள் (Electro magnetic Fields) மக்களின் உடல்நலனில் எதிர் மறையான தாக்கத்தை ஏற்படுத்தும்.

இவை அனைத்தையும் விட பாரிய அபாயம் எம் சொந்த நிலத்தை இழப்பது ஆகும். ஏற்கனவே பல திட்டங்களால் சுரண்டப்படும் மன்னார் மண் இந்தத் திட்டத்தாலும் ஆக்கிரமிக்கப்பட்டு மக்கள் தம் சொந்த நிலங்களை இழக்கும் நிலை கூட வரும் என்பதில் ஐயமில்லை.

பசுமை ஆற்றல் என்பது காலத்தின் கட்டாயம் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. எனினும், ஒரு பகுதி மக்களுக்கு நிரந்தரமான வாழ்வாதார இழப்பையும், சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த சூழலியல் பேரழிவையும் ஏற்படுத்தி நிறைவேற்றப்படும் எந்தவொரு திட்டமும் நிலையான வளர்ச்சியை உறுதி செய்யாது. அரசு தேசிய நலன்களையும், உள்ளூர் மக்களின் பாதுகாப்பையும், சுற்றுச்சூழலின் பேண்தகைமையையும் சமன் செய்யும் வகையில், மாற்று இடங்கள் அல்லது தணிப்பு உத்திகள் குறித்துக் கவனம் செலுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம் உள்ளது.

மன்னார் மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தைக் காக்க எழுப்பும் குரல்கள், தேசிய அபிவிருத்தி என்ற பெயரில் புறக்கணிக்கப்படுவது நீதியா?



**பொனிஸ்ரெலா சந்தியாசன்,**
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.



# வீர மங்கை மாலதி: பெண்களின் எழுச்சியில் ஒரு பொற்கொடி!

## (ஒக்ரோபர் 10 ஆம் திகதி மாலதியின் நினைவு தினம் ஆகும்)

ஒவ்வொரு சமூக மாற்றத்துக்குப் பின்னால் ஏராளமான தியாகங்களும், நம்பிக்கைகளும் ஒளிந்து கிடக்கின்றன. இன்று நாம் பேசும் பெண்கள் எழுச்சி என்பது யாரோ ஒருவரால் திடீரென உருவாக்கப்பட்ட ஒன்று அல்ல. பல பெண்களின் வாழ்வின் உந்துதல், சமூகத்துக்கு கொடுத்த அர்ப்பணிப்பு, நேர்மையால் விளைந்ததாகும். அவர்களில் குறிப்பிடத்தக்கவையாக தமிழீழத்தின் முதல் பெண் மாவீரர் மாலதி திகழ்கிறார். ஒவ்வொரு தேசிய விடுதலைப் போராட்டத்திலும் சிலர் வரலாற்றின் பக்கங்களில் இடம்பெறும் வீரர்கள், சிலர் மறந்துபோகும் மௌன வீரர்களாகவே மாறுகிறார்கள். ஆனால் இலங்கையின் இனவாத ஒடுக்குமுறைக்கு எதிராக எழுந்த மக்களின் வரலாற்றில் முதல் பெண் வீரராக தன் பெயரை பொறித்தவர் மாலதி. அவரது 38 ஆவது நினைவு நாள் நிறைவடைந்துள்ளது. இந்த நிலையில் அவர் செய்த தியாகத்தை, அவரது கனவுகளை, அவரது பாதையை நாம் நினைவுகூர வேண்டும். அவரது நினைவு நாளில் அவரது வாழ்க்கையும், தியாகமும், இன்றைய பெண்கள் எழுச்சிக்கு வழங்கும் பாடங்களும் குறித்து ஆழமாகக் கவனிக்க வேண்டும்.

சகாயசீலி பேதுருப்பிள்ளை எனும் இயற்பெயரைக் கொண்ட 2 ஆம் லெப். மாலதி மன்னாரில் பிறந்தார். பெண்கள் அடிமைக் கூண்டுக்குள் வாழ்ந்த காலக்கட்டத்தில் ஈழத்தமிழ்ப் பெண்களின் ஆளுமையை சமூகத்துக்கு எடுத்துரைத்து அடிமைப்பட்டிருந்த பெண்களை விழிப்படையச் செய்தார். பெண் தலை நிமிர்ந்தால் ஆபத்து என்று பெண்ணை இழிவாகவும் அடக்கியும் வைத்திருந்த அந்தக் கடுமையான காலப் பகுதியில் சிறு வயதிலிருந்தே தற்துணிவும், தன்னம்பிக்கையும் மிகுந்த வீரப் பெண்ணாகத் திகழ்ந்தார் மாலதி. எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் அதிமுக்கிய பங்கை வகித்த பெண் விடுதலையை முழு மனதோடு நேசித்த மாலதி, விடுதலைப் பயணத்தில் இணைந்து சாதனைப் பெண்ணாக உருவானார். போர் முனையிலும் அரசியல் தளத்திலும் சிறப்பாக கடமையாற்றினார்.

1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 10 ஆம் திகதி இந்திய அமைதிப்படைக்கு எதிராக யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் போராடி மாலதி வீரச்சாவடைந்தார். பெண்கள் எதிலும் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபித்து போர்முனையில் மட்டுமல்லமால் அரசியல், மருத்துவம், ஊடகம் எனும் வெவ்வேறு களங்களில் தங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதன் உன்னத சிந்தனைக்கு அமைவாக எமது பெண்கள் வளர்ந்தார்கள்,

தொடர்ச்சி▼

# வீர மங்கை மாலதி: பெண்களின் எழுச்சியில் ஒரு பொற்கொடி!

தொடர்ச்சி▲

சாதனை படைத்தார்கள். இவ்வாறு வீரப்பெண்கள் வாழ்ந்து வீரம் பதித்த மண்ணில் இன்று எமது ஈழத்தமிழ்ப் பெண்கள் அனைத்து சவால்களையும் தாண்டி காலத்தின் சூழ்ச்சிகளை எதிர்த்து தமது இருப்புக்காகவும் எதிர் காலத்துக்காகவும் தொடர்ந்தும் போராடி வருகின்றார்கள்.

இந்த நிலையில், பெண்கள் குறித்த சமூக நோக்கு பெரும்பாலும் அடக்குமுறைக்குக் கட்டுப்பட்டிருந்தது. ஆனால், மாலதி இந்தச் சூழ்நிலைக்கு எதிராகவும் பெண்கள் மனநிலைக்கு புதிய புரட்சிக் குரலாகவும் வருகிறார். இது பெண்கள் போராட்டத்தில் ஈடுபட முடியாதவர்கள் என்ற அபிப்பிராயத்துக்கு எதிரான மிக வலிமையான பதிலாக அமைந்தது. அவரது வீரச்சாவு தமிழீழ விடுதலைப் பாதையில் பெண்கள் பங்கெடுக்கும் வாய்ப்பை திறந்துவைத்தது.

மாலதியின் செயல் வன்முறையல்ல அது அழிப்புக் குரிய வன்மம் அல்ல. அது தனது சமூகத்தின் வாழ்வை பாதுகாக்கும் நம்பிக்கையின் வெளிப்பாடாகும். பெண்கள் விடுதலை என்பது சமுதாய முழுமை அடைய வேண்டிய விடயம் என்பதற்கான எடுத்துக்காட்டாகும். இன்றைய பெண்கள் எழுச்சி தினத்தில் அவர் காட்டிய பாதை பெண்கள் சமூக, அரசியல், கலாசார தளங்களில் தங்கள் உரிமையை எதிர்த்துப் பேசியதற்கான முன்னோடி என பார்க்கப்பட வேண்டும்.

பெண் அடிமைத்தனம் ஒழிந்து பெண் விடுதலை எங்கும் தலை நிமிர்ந்து பெண் என்றால் படையும் நடுங்கும் என்ற சூழலைப் படைத்தவர்கள் எமது ஈழப் புதல்விகள்.

21 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து வரும் நாம், பெண் விடுதலையை உலகுக்கு இன்னும் எடுத்துரைக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். பெண் விடுதலைக்கு அடையாளமானவர்கள் எமது தமிழ்ப் பெண்கள். எமது அடுத்த சந்ததியினரை நகர்த்த வேண்டிய தலையாய கடமையை எமது தேச நாயகிகள் எமக்கு விட்டுச் சென்றிருக்கிறார்கள். அந்தக் கடைமையை மனதார ஏற்று தேச விடுதலை நோக்கிய பயணத்தில் ஒன்றிணைந்து உலகெங்கும் தமிழ்ப் பெண்ணினத்தின் எடுத்துக்காட்டாக வாழ்ந்து சாதனைகள் படைப்போம் என இந்த நாளில் சபதம் எடுத்துக் கொள்வோம்.

### இன்றைய பெண்கள் எழுச்சி தொடரும் போராட்டம்

இன்று பெண்கள் கல்வி,தொழில், ஊடகம், அரசியல் என பல துறைகளில் முன்னேறி வருகிறார்கள். ஆனால், இன்னும் இடர்ப்பாடுகள் நீங்கவில்லை. பாலியல் தொல்லை, வருவாய் வேறுபாடு, சமூக கட்டுப்பாடுகள், கலாசார அழுத்தங்கள் இன்னும் தொடர்கின்றன. இந்த நிலையில் மாலதியின் வாழ்க்கை இளைய பெண்களுக்கு ஒரு உணர்வு பூர்வமான வழிகாட்டியாக இருக்கலாம். அதிகபட்சமாக ஒரு பெண் என்ன செய்ய முடியும்? என்பதற்குப் பதிலாக அவளால் எதையும் செய்ய முடியும் என்பதையே அவரது வாழ்க்கை எடுத்துச் சொல்லுகிறது.

மாறவேண்டும் என்ற எண்ணமே எழுச்சியின் தொடக்கமாகும். மாலதி தனது வீட்டை விட்டு வெளியேறியபோது ஒரு கனவு இருந்தது "எதிர்காலத் தமிழ்க்கனவுகளை நனவாக்க வேண்டும்" என்பது. இன்றைய பெண்கள் அக்கனவை சமூக மாற்றங்களுக்குள் கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு உடையவர்கள். அவர்கள் தங்கள் சமூகத்தில், குடும்பத்தில், தொழிலில், கல்வியில் முன்னேறுவதற்கான சக்தியாக மாற வேண்டியது அவசியமாகிறது.

மாலதி ஒரு போர் வீரர் மட்டுமல்ல. அவர் ஒரு பெண்ணியக் கருத்து, ஒரு சமுதாய விழிப்புணர்ச்சி, தன்னலம் பார்க்காத செயல், முன்னோடித் தியாகம் என்பவற்றின் நிறைவேற்பாகும். இன்றைய பெண்கள் எழுச்சி நாளில் நாம் அவரை நினைவு கூர்வது என்பது வெறும் புகழ்வதற்காக அல்ல அவருடைய பாதையை நம் வாழ்க்கை சிந்தனைகளில் இணைத்து சமூகத்தின் ஒவ்வொரு பெண்ணும் தன் உரிமைக்கும், வளர்ச்சிக்கும் குரல் கொடுக்க வழிவகுப்பதே உண்மையான நெஞ்சார்ந்த நினைவாகும்.

மாலதி போராளியாக மட்டுமல்ல ஒரு பெண்ணிய குரலாகவும் அவர் காணப்பட வேண்டும். ஒரு பெண், தன் சமூகத்தின் விடுதலைக்காக தன் உடலை கூட ஒரு ஆயுதமாக மாற்றிக்கொள்வது என்பது வன்முறை கண்டு தழுவும் மனநிலை அல்ல. இது அதிகபட்ச அர்ப்பணிப்பும் அதற்குப் பின்னால் இருக்கும் அடக்குமுறையின் வெளிப்பாடுமாகும்.

### இளம் தலைமுறைக்கு ஒரு பாடம்

இப்போது, யுத்தம் முடிந்து ஆண்டுகள் கழிந்தும், மாலதியைப் போல தன்னலம் பார்க்காமல் போராடியவர்களின் கனவுகள் நனவாகியுள்ளனவா? என்பதே கேள்வி. இன்று இளம் தலைமுறையினர் அவர்களின் தியாகம், இலட்சியம் மற்றும் நோக்கங்களை புரிந்து கொள்ள வேண்டும்.

மாலதி ஒருவர் அல்ல ஒரு சின்னம். தமிழீழ மகளிர் போராட்டத்தின் துடிப்பைத் தாங்கிய முதன்மை ஒளிக் கதிர். இன்று அவர் இல்லை என்றாலும் அவரது தியாகம் ஒவ்வொரு தமிழ்ப் பெண்ணின் வாழ்விலும் சுதந்திரத்தின் கனவிலும் நிழலாகவே இருக்கிறது. மாலதியின் நினைவு நாளில் அவரது வாழ்வும், வீரவணக்கமும், நம் வரலாற்றின் பகுதியாக என்றும் வாழட்டும்!

வீரமங்கை மாலதி இது வெறும் பெயராக மட்டும் அல்ல பெண்களின் எழுச்சிக்கான சக்தி, தன்னலமற்ற தியாகத்தின் சின்னம், பெண்ணியத்தின் உச்ச வடிவம். அவர் எடுத்த பாதை, போராட்டம், தியாகம் இன்றைய தலைமுறைக்குப் போர்வெளியில் மட்டுமல்லாது வாழ் வெளியிலும் வெளிச்சமாய் வழிகாட்டுகிறது. இன்றைய பெண்கள் எழுச்சி நாளில் மாலதி போன்ற வீரமங்கைகளை நினைவு கூர்வது அவர்களது விடுதலைக் கனவுகளை உண்மையாக்கும் முயற்சியின் ஒரு படியாக இருக்க வேண்டும். சமூக நியாயம், சம உரிமை, ஜனநாயகம் ஆகியவற்றுக்காக இன்று முன்னேற முயலும் பெண்களுக்கு மாலதி ஒரு பொற்கொடி. மரியாதைக்கும், வீரத்துக்கும், மாற்றத்துக்குமான சின்னம். மாலதி சுடராயிருந்தார் அவர் கனவுகள் நம்மால் நனவாக வேண்டும்!



**மதுஷாயினி மதிவதனன்,**
ஊடக கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.




# ராகல மண்ணில் நடந்த கரபந்தாட்டம் இரண்டாவதாக ஸ்ரீபாத பன் போய்ஸ்!

**(மஸ்கெலியா)**

ராகல மண்ணில் இரண்டாவது முறையாக நடத்தப்பட்ட மாஸ்டர் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மஸ்கெலியா பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்திய ஸ்ரீபாத பன் போய்ஸ் (Fun Boys) அணியினர் இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்டனர்.

இந்த அணியின் தலைவராக பிரதேச சபையின் உறுப்பினர் சுரேஷ்குமார் செயற்பட்டார்.

நீண்ட நாள்களுக்குப் பின்னர் சமகால ஓய்வைத் தொடர்ந்து எமது மண்ணுக்கும் பிரதேசத்துக்கும் ஸ்ரீபாத பன் போய்ஸ் அணியினர் பெருமை சேர்த்துள்ளனர் என்று பல்வேறு தரப்பிலும் பாராட்டுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.





# நாவற்குழியில் வெள்ள அனர்த்தத்தை தவிர்க்க வெள்ள வாய்க்கால் துப்புரவு!

**(த.சுபேசன்)**

மழை காலம் ஆரம்பித்துள்ள நிலையில், வெள்ள அனர்த்தத்தைத் தவிர்க்கும் முகமாக நேற்று சனிக்கிழமை நாவற்குழி முந்நூறு வீட்டுத்திட்டப் பகுதியில் உள்ள வெள்ள வாய்க்கால் துப்பரவு செய்யப்பட்டது.

இந்தச் சிரமதான நிகழ்வில் கிராம சேவையாளர், அபிவிருத்தி உத்தி யோகத்தர், அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர், சாவகச்சேரிப் பிரதேச சபையின் உப தவிசாளர், பிரதேச சபை யின் ஊழியர்கள், கிராம அபிவிருத்தி சங்க தலைவர் மற்றும் நலன்விரும்பிகள் கலந்து கொண்டனர்.



# மதுரையில் இருந்து சென்னை வந்த இண்டிகோ விமான கண்ணாடி உடைவு

## நடுவானில் பதற்றமடைந்த பயணிகள்

(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

மதுரையில் இருந்து சென்னை வந்த இண்டிகோ விமானத்தின் கண்ணாடி நடுவானில் உடைந்ததால் விமானத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

விமானத்தில் பயணித்த 74 பயணிகள், 5 விமான பணியாளர்கள் என 79 பேர் உயிர் தப்பினர்.

மதுரையில் இருந்து நேற்று சனிக்கிழமை அதிகாலை சென்னைக்கு 76 பயணிகளுடன் வந்த இண்டிகோ ஏர்லைன்ஸ் விமானத்தின் முன் பக்க கண்ணாடியில் நடுவானில் பறந்து கொண்டிருந்த போது விரிசல் ஏற்பட்டுள்ளது.

இதனை கவனித்த விமானி சாதுரியமாகச் செயல்பட்டு விமானத்தைப் பாதுகாப்பாகத் தரையிறக்கினார்.

தற்போது விமானத்தின் கண்ணாடியை மாற்றுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

நடுவானில் விமானத்தின் கண்ணாடி உடைந்ததற்குக் காரணம் எதுவும் வெளியாகவில்லை. சென்னையில் இருந்து மதுரைக்கான பயணம் இரத்து செய்யப்பட்டுள்ளதால் பயணிகள் கடும் அவதி அடைந்துள்ளனர். அவர்களுக்கு மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

# மேற்கு வங்கத்தில் கூட்டு பாலியல் வன்கொடுமை சந்தேகத்தின் பேரில் மூன்று பேர் கைதாகினர்!

## பாதிக்கப்பட்ட மணவிக்கு நீதி கேட்டுப் போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள்




மேற்கு வங்கத்தில் மருத்துவக் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படித்து வரும் ஒடிசாவைச் சேர்ந்த மாணவி, கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எனினும், கைது செய்யப்பட்டவர்களின் விவரங்களை பொலிஸார் இன்னும் வெளியிடவில்லை.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய பொலிஸ் அதிகாரி ஒருவர்,

"இந்த வழக்கில் தொடர்புடைய மூன்று பேரை நாங்கள் சந்தேகத்தில் கைது செய்துள்ளோம். அவர்களிடம் விசாரணை நடைபெற்று வருகிறது. இது மிகவும் உணர்ச்சிகரமான வழக்கு. கூடுதல் தகவல்களை நாங்கள் பின்னர் தெரிவிப்போம்" என கூறினார்.

ஒடிசாவின் ஜலேஸ்வர் பகுதியைச் சேர்ந்த மாணவி, மேற்கு வங்கத்தின் பஸ்சிம் பர்தமான் மாவட்டத்தின் துர்காபூரில் உள்ள தனியார் மருத்துவக் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு பயின்று வருகிறார். இவர், நேற்று முன்தினம் இரவு உணவு உட்கொள்வதற்காக, மருத்துவக் கல்லூரி வளாகத்துக்கு வெளியே தனது நண்பர் ஒருவருடன் சென்றுள்ளார். அப்போது மூன்று பேரும் சேர்ந்து மிரட்டியதில் உடன் வந்த நண்பர் மாணவியை விட்டுவிட்டு ஓடியுள்ளார். இதையடுத்து, அந்த மாணவியை ஒதுக்குப்புறம்பான இடத்துக்கு அழைத்துச் சென்ற அவர்கள், அவரை கூட்டு பாலயல் வன்கொடுமை செய்துள்ளனர்.

இது தொடர்பாக நேற்று செய்தியாளர்களிடம் பேசிய பொலிஸ் அதிகாரி,

"மருத்துவக் கல்லூரி மாணவி வெள்ளிக்கிழமை இரவு 8 .30 மணியளவில் தனது நண்பருடன் வெளியே சென்றது ஆரம்ப விசாரணையில் தெரிய வந்துள்ளது.அடையாளம்தெரியாதமூன்றுஆண்கள் அங்கு வந்தபோது உடன் வந்த நண்பர், மாணவியை தனியாக விட்டுவிட்டுச் சென்றுள்ளார். அந்த நபர்கள், மாணவியின் தொலைபேசியைப் பறித்துக் கொண்டு வளாகத்துக்கு வெளியே உள்ள ஒரு காட்டுக்கு அழைத்துச் சென்று பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து யாரிடமாவது சொன்னால் மோசமான விளைவுகள் ஏற்படும் என மிரட்டி உள்ளனர். பாதிக்கப்பட்ட மாணவியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. மாணவியுடன் உடன் சென்ற அவரது நண்பரிடமும் பேசினோம்" எனத் தெரிவித்தார்.

இந்த சம்பவம் குறித்துக் கருத்துத் தெரிவித்த தேசிய மகளிர் ஆணைய உறுப்பினர் அர்ச்சனா மஜூம்தார்,

"மேற்கு வங்கத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்து வருகின்றன. இதுபோன்ற வழக்குகளில் பொலிஸார் எந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுப்பதில்லை. இது மிகவும் துரதிர்ஷ்டவசமானது. இதுபோன்ற குற்றங்கள் அதிகரிப்பதைத் தடுக்க முதல்வர் மம்தா பானர்ஜி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்." – எனத் தெரிவித்தார்.

# எகிப்தில் காசா அமைதிக்கான உச்சி மாநாடு; பிரதமர் மோடியை அழைத்தனர் ட்ரம்ப், அல் சிசி!





பாலஸ்தீனத்தின் காசா பகுதி அமைதிக்கான உச்சி மாநாடு நாளை (13) எகிப்தில் நடைபெறவுள்ளது. இதில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்க அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு ட்ரம்ப் மற்றும் எகிப்து ஜனாதிபதி அல் சிசி ஆகியோர் அழைப்பு விடுத்துள்ளனர்.

கடந்த 2023 ஒக்ரோபரில் ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேலில் நடத்திய தாக்குதலால் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் தரப்புக்கு இடையிலான மோதல் மிக தீவிரமானது. அதற்கடுத்த இந்த இரண்டு ஆண்டுகளில் இஸ்ரேல் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை காரணமாகப் பாலஸ்தீனத்தை சேர்ந்த சுமார் ஆயிரக் கணக்கான காசா மக்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்த நிலையில், அமெரிக்கா உட்பட உலக நாடுகளின் தீவிர முயற்சியால் அண்மையில் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையில் போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

கடந்த 10 ஆம் திகதி காசாவில் போர் நிறுத்தம் அமுலுக்கு வந்தது. இதன் பின்னர் இஸ்ரேலின் இடைவிடாத தாக்குதல் காரணமாக காசாவில் இருந்து இடம்பெயர்ந்து சென்ற மக்கள் தங்கள் வீடுகளுக்கு திரும்பி வருகின்றனர்.

இந்த நிலையில், போர் நிறுத்தத்தைக் கண்காணிக்க அமெரிக்கா உட்பட சில நாடுகள் தங்களது வீரர்கள் மற்றும் அதிகாரிகளை பணியமர்த்தி உள்ளது. இந்தச் சூழலில் காசா அமைதிக்கான உச்சி மாநாடு நாளை நடைபெறவுள்ளது.

சுமார் 20 நாடுகள் பங்கேற்கும் இந்த மாநாட்டுக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு ட்ரம்ப் மற்றும் எகிப்து ஜனாதிபதி அல் சிசி ஆகியோர் தலைமை தாங்குகின்றனர். இதில் பங்கேற்க பிரதமர் மோடிக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

எகிப்து நேரப்படி நாளை மதியம் இந்த மாநாடு நடைபெறுகிறது. இதில் பிரதமர் மோடி பங்கேற்பது குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு எதுவும் இதுவரை வெளியாகவில்லை. இதில் பிரதமர் மோடி பங்கேற்றால் அது பல்வேறு வகையில் சாதகமாக அமையும் என்ற கருத்து நிலவுகிறது.

அந்த வகையில் மத்திய கிழக்கு பகுதியில் அமைதி நிலை திரும்புவது சார்ந்து இந்தியாவின் நிலைப்பாடு, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பை பிரதமர் மோடி சந்திப்பதற்கான வாய்ப்பு, எகிப்து உடனான இந்தியாவின் உறவு, பாலஸ்தீனத்துக்கான இந்தியாவின் ஆதரவு உள்ளிட்டவை உலக அளவில் வெளிப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# நாங்கள் வரிப் போரை விரும்பவில்லை ட்ரம்பின் வரி விதிப்புக்கு சீனா பதில்!

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் 100 வீத வரி அச்சுறுத்தலுக்கு பதிலளித்துள்ள சீனா, 'நாங்கள் ஒரு வரிப் போரை விரும்பவில்லை, ஆனால் நாங்கள் அதைப் பற்றிப் பயப்படவும் இல்லை. அமெரிக்கா, அச்சுறுத்தல்களுக்குப் பதிலாகப் பேச்சுவார்த்தைகள் மூலம் வேறுபாடுகளைத் தீர்க்க வேண்டும்' என்று வலியுறுத்தியுள்ளது.

சீனப் பொருள்களுக்கு நவம்பர் முதலாம் திகதி முதல் கூடுதலாக 100 வீத வரி விதிக்கப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்துள்ளார். இது தொடர்பாக சீன அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், 'சீனாவின் நிலைப்பாடு எப்போதும் நிலையானது. நாங்கள் ஒரு வரிப் போரை விரும்பவில்லை, ஆனால் நாங்கள் அதைப் பற்றி பயப்படவும் இல்லை. அதிக வரிகள் விதிப்பதாக அடிக்கடி அச்சுறுத்துவது சீனாவுடன் ஒத்துப்போக சரியான வழி அல்ல. அமெரிக்கா அச்சுறுத்தல்களுக்குப் பதிலாக பேச்சுவார்த்தைகள் மூலம் வேறுபாடுகளைத் தீர்க்க வேண்டும். அமெரிக்க தரப்பு அதன் வரிவிதிப்பு நடவடிக்கைகளில் பிடிவாதமாக இருந்தால், சீனா அதன் சட்டபூர்வமான உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாக்க உறுதியான நடவடிக்கைகளை எடுக்கும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற ட்ரம்ப் பல்வேறு நாடுகளின் பொருள்களுக்கான வரியை கணிசமாக அதிகரித்தார். இதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியதால் வரியைச் சற்றுக் குறைத்தார். அந்த வகையில் சீனப் பொருள்களுக்கு இப்போது 30 வீத வரி விதிக்கப்படுகிறது.

இந்த நிலையில், ஜனாதிபதி ட்ரம்ப் கடந்த 10 ஆம் திகதி தனது சமூக வலைதளப் பதிவில்,

'ஸ்மார்ட்போன், மின்சார வாகனங்கள், இராணுவ தளபாடங்கள் உற்பத்திக்கு தேவைப்படும் அரியவகை தனிமங்கள் ஏற்றுமதிக்கு கட்டுப்பாடு விதிக்கப்படும் என்று சீன அதிபர் ஜி ஜின்பிங் உலக நாடுகளுக்கு கடிதம் எழுதியுள்ளார். உலக நாடுகளை தனது பிடியில் வைத்திருக்க விரும்பும் சீனாவை ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது.

எனவே, சீனாவில் இருந்து இறக்குமதியாகும் அனைத்துப் பொருள்களுக்கும் நவம்பர் முதலாம் திகதி முதல் கூடுதலாக 100 வீத வரிவிதிக்கப்படும். சீனா வேறு ஏதேனும் நடவடிக்கை எடுத்தால், இந்த உயர்வு உடனடியாக நடைமுறைக்கு வரும்' என்று தெரிவித்துள்ளார்.

ஒக்ரோபரில் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கை சந்திக்க உள்ளார் என்று ஏற்கெனவே தெரிவித்திருந்த ட்ரம்ப், அந்த சந்திப்பு நடப்பதில் அர்த்தம் இல்லை என்றும் அந்த பதிவில் கூறியுள்ளார்.

பக்கங்கள் 04

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 12/10/2025

## குழந்தைகளின் கற்றலுக்கு திரை நேரத்தினால் பாதிப்பு



புதிய கனடிய ஆய்வு 02



# கனடா மீது இன்னும் வரிகளை அமெரிக்கா விதிக்கும் சாத்தியம்

## கனடா பிரதமர் மார்க் கார்னி தெரிவிப்பு

கனடா - அமெரிக்கா - மெக்ஸிகோ (CUSMA) வர்த்தக ஒப்பந்தம் மீண்டும் பேச்சுவார்த்தைக்கு வந்த பின்னரும் அமெரிக்கா சில துறைகளை குறிவைத்து வரிகளை விதிக்கும் என்பது தெளிவாகிறது என்று கனடா பிரதமர் மார்க் கார்னி கூறுகிறார். 02

# தற்போதைய லிபரல் அரசின் முதல் வரவு - செலவுத் திட்டம்

## நலத்திட்டங்களை அள்ளிக்கொண்டு வருகின்றதாம்

தற்போதைய லிபரல் அரசாங்கத்தில் முதலாவது வரவு – செலவுத் திட்டம் மக்களுக்கான நலத்திட்டங்களை அள்ளிக் கொண்டு வருகிறது என்று தெரிவிக்கப்படுகின்றது.

தனது முதலாவது வரவு – செலவுத் திட்டத்தின் முன்னோட்டத்தில், வெள்ளிக்கிழமை பிரதமர் மார்க் கார்னி தொடர்ச்சியான மலிவு விலை விவரங்களை அறிவித்தார், இலையுதிர்கால பொருளாதார வெளிப்படுத்தலுக்கு முன்னதாக சில வசந்தகால பிரசார உறுதிமொழிகளை நிறைவேற்றினார்.

வெள்ளிக்கிழமை ஒட்டாவாவில் உள்ள ஒரு பொழுதுபோக்கு மையத்தில் அவர் வெளியிட்ட உறுதி மொழிகளில், தமது அரசாங்கம் வரி தாக்கல் செய்வதை எளிதாக்கும், பள்ளி உணவுத் திட்டத்தைப் பாதுகாக்கும் மற்றும் விடுமுறை நாள்களில் பயணம் செய்யும் குடும்பங்களுக்கான செலவுகளைக் குறைக்கும் என்று மார்க் கார்னி கூறினார்.

நிதியமைச்சர் பிரங்கொயிஸ் பிலிப்பி ஷம்பெயினின் கருத்துப்படி, இந்த நிகழ்வு முதல் முறையாகும், ஆனால் வரவு – செலவுத்திட்டம் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னர் லிபரல்கள் வரவு –செலவுத் திட்டத்தில் இருக்கும் சில விடயங்களை மாற்றம் செய்யும் இறுதிச் சம்பவமாக இது இருக்காது என்றார்.

“இன்னும் நல்ல செய்திகள் வரப்போகின்றன, என்னை 02






# ஒன்டாரியோ வாகன விபத்தில் ஒருவர் மரணம் மூவர் காயம்!

ஒன்டாரியோ மாகாணத்தின் அமரந்த் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். மூவர் காயமடைந்துள்ளனர்.

இரண்டு எஸ்.யு.வீ வாகனங்கள் மோதி நிகழ்ந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்தார் என மாகாண பொலிஸ் தெரிவித்துள்ளது.

டஃபெரின் ஓ.பி.பி (ஒன்டாரியோ மாகாண பொலிஸ்) வெளியிட்ட தகவலின்படி, இரு வாகனங்கள் மோதிய விபத்து கவுன்டி 10 மற்றும் கவுன்டி 12 சந்திப்புகளுக்கு அருகில் ஏற்பட்டது.

மேற்கு திசையில் பயணித்த ஹோண்டா SUV ஒன்று, கிழக்கு திசையில் வந்த டொயோட்டா ஆர்ஏவி4 வாகனத்துடன் மோதியதாக பொலிஸ் தெரிவித்துள்ளது.

ஹொண்டா வாகனத்தின் சாரதி, கிராண்ட் வாலி பகுதியைச் சேர்ந்த 61 வயதுடைய ஆண், சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

டொயோட்டா வாகனத்தை ஓட்டிய 36 வயது பெண் கடுமையான காயங்களுடன் டொரொண்டோ மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

அதே வாகனத்தில் இருந்த இரு சிறார்களும் அருகிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் காய நிலை குறித்து இதுவரை தகவல் வெளியாகவில்லை. விபத்து நடந்த பகுதி பல மணி நேரம் மூடப்பட்டு இருந்தது. தற்போது அந்த சாலை போக்குவரத்திற்கு திறக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## கனடா மீதும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கனடாவில் CUSMA என்று அழைக்கப்படும் ஒப்பந்தத்தை புதுப்பிப்பதற்கான பேச்சுவார்த்தைகள் அடுத்த ஆண்டு தொடங்க உள்ளன. ஆனால் அந்தப் பேச்சுவார்த்தைகள் துரதிர்ஷ்டவசமாக நிலுவையில் உள்ள அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்க்க வாய்ப்பில்லை என்று கார்னி கூறுகிறார்.

அதனால்தான் கனடா இரும்பு, அலுமினியம், வாகனம் மற்றும் மென்மரக் கட்டைகள் போன்ற துறை சார்ந்த வரிகளில் ஒப்பந்தங்களை மேற்கொள்ள முயற்சிக்கிறது என்றும் அவர் கூறுகிறார்.

கனடா–அமெரிக்க வர்த்தகத்துக்குப் பொறுப்பான கனடா அமைச்சர் டொமினிக் லீபிளாங் நேற்றைய தினம் வொஷிங்டனில் இருந்து நாடு திரும்பிய பின்னர், கட்டண நிவாரணத்திற்காக அழுத்தம் கொடுக்க அமெரிக்க அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகள் தொடரும் என்றார்.

செவ்வாயன்று வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் கார்னி இடையேயான சந்திப்பின் போது, கனடா மீது இன்னும் வரிகள் இருக்கும் என்றும், ஊஎஸ்ஏ பற்றிய தொடர்பில் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டாலோ அல்லது வேறு ஒப்பந்தங்களால் மாற்றப்பட்டாலோ தனக்கு கவலையில்லை என்றும் டொனால்ட் ட்ரம்ப் செய்தியாளர்களிடம் கூறினார்.

## குழந்தைகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒன்று குழந்தைகளின் அதிக திரை நேரம் மற்றும் குறைந்த கல்விச் செயல் திறன் இடையே குறிப்பிடத்தக்க தொடர்பு இருப்பதை கண்டறிந்துள்ளது.

டொராண்டோவின் புனித மைக்கல் மருத்துவமனை மற்றும் சிறுவர் மருத்துவமனை இணைந்து நடத்திய ஆய்வில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

இந்த ஆய்வு 2008 முதல் 2023 வரை 15 ஆண்டுகள், ஒன்டாரியோவில் உள்ள 3,000-க்கும் மேற்பட்ட குழந்தைகள் பற்றிய தகவல்களை உள்ளடக்கியுள்ளது.

பெற்றோர் தெரிவித்த தகவல்களின் அடிப்படையில், அவர்கள் தொலைக்காட்சி, வீடியோ கேம்கள், கணினி மற்றும் டேப்லெட்டுகளில் செலவிட்ட நேரம் கணக்கிடப்பட்டது.

அந்த தரவுகள் ஒன்டாரியோ கல்வித் துறையின் EQAO நிலையான தேர்வு மதிப்பெண்களுடன் ஒப்பிடப்பட்டன.

ஒவ்வொரு கூடுதல் மணி நேர திரை நேரத்திற்கும், வாசிப்பு மற்றும் கணிதத்தில் நிலையான தரத்தை அடைவதற்கான வாய்ப்பு சுமார் 10 வீதம் குறைகிறது என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆய்வு முடிவுகள் அதிக திரை நேரம் கவனம் செலுத்தும் திறனை பாதிக்கக் கூடும் என்பதையும் வெளிப்படுத்தியது.

“திரை நேரம் நமது கவனத்தை குறுகிய இடைவெளிகளில் செயல்பட பழக்கப்படுத்துகிறது. இது ஆழமான சிந்தனைக்கும் கற்றலுக்கும் இடையூறு ஏற்படுத்துகிறது” – என ஒட்டாவா பல்கலைக் கழகத்தின் கல்வி கொள்கை ஆய்வாளர் டாக்டர் சச்சின் மகாராஜ் தெரிவித்துள்ளார்.

## தற்போதைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

நம்புங்கள்” –என்று ஷம்பெயின் கூறினார். “நாங்கள் என்ன செய்கிறோம் என்பதை கனேடியர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்” – எனக்கூறிய நிதியமைச்சர், 2026 வரி ஆண்டு தொடக்கம் Canada Revenue Agency, 5.5 மில்லியன் குறைந்த வருமானம் கொண்ட கனேடியர்களுக்கு தானாகவே வரிகளை தாக்கல் செய்யும். இந்த திட்டம் படிப்படியாக 2028 ஆம் ஆண்டு வரை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுவதாக அவர் கூறினார்.

இந்த திட்டம் கனேடியர்கள், கனடா குழந்தை நலத்திட்டம் மற்றும் GST/HST credit போன்ற மத்தியரசின் சலுகைகளை பெற்றுக்கொள்வதற்காக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

அரசாங்கத்தின் இந்த அறிவிப்பு குறித்து கருத்து வெளியிட்ட ஓர் முன்னணி வரி தயாரிப்பு மற்றும் software நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய சங்கமான Tax-Filer Empowerment Canada இந்த நடவடிக்கை இலக்கைத் தவறவிட்டதாகக் கூறியது.











# வடக்கு – கிழக்கின் மேம்பாட்டுக்கான 3 நாள் மகாநாடு கனடாவில் ஆரம்பம்

## அனைத்துலகத் தமிழர் பேரவையின் வருடாந்த ஒன்றுகூடலாக இன்று இறுதி நாள் இரவு நிகழ்வு

இலங்கை வடக்கு கிழக்கு மாகாணங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சி நோக்கில் ஆய்வு மாநாடு அனைத்துலகப் பேரவையின் ஏற்பாட்டில் ஒக்டோபர் 10ஆம் திகதி டொரண்டோ பல்கலைக் கழகத்தின் ஸ்கார்பரோ கேம்பஸில் ஆரம்பமானது.

இந்த ஆய்வு மாநாட்டில் 75பேருக்கும் மேல் கலந்துகொள்ள விண்ணப்பித்திருந்த நிலையில் 53பேரின் ஆய்வுக் கட்டுரைகள் மாநாட்டில் சமர்பிக்கப்படவுள்ளன.

அறிவுசார்ந்த இந்த நிகழ்வு புலமை சார்ந்தவர்களின் ஆலோசனைகளின் அடிப்படையில் இடம்பெறுகிறது. பல்வேறு முக்கிய பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 15 பேராசிரியர்களை உள்ளடக்கிய அணியே இதனை பரிசீலித்து ஆய்வுக்கட்டுரைகளைப் பரிந்துரைத்துள்ளது.

இந்த மாநாட்டிற்காக தாயகத்தில் இருந்தும் அரசியல் பிரதிநிதிகளும் பேராசிரியர்களும் கலந்து கொண்டுள்ளமையுடன் புலம்பெயர் தேசத்தில் உள்ள அறிஞர்கள், ஆளுமைகளும் கலந்து கொண்டுள்ளனர்.

தேச விடுதலையை தமிழர்கள் அடைகின்ற வேளையில் பொருளாதார பலத்துடனும் இருக்க வேண்டும் என்ற எதிர்பார்பில் இந்த மாநாடு முன்னெடுக்கப்படுவதாக அதன் இடைக்காலத் தலைவர் நிமால் விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

இதன்படி தமிழர் தாயகத்தில் பொருளாதார அபிவிருத்தி சார்ந்த வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவும் ஏற்கனவே முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களை வலுப்படுத்தவும் இந்த மாநாடு பெரிய பங்களிப்பை வழங்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒக்டோபர் 10 ஆரம்பித்துள்ள இம்மாநாடு இன்று ஒக்டோபர் 12 வரை இடம்பெறுகின்றது.

இன்று இறுதிநாள் இரவு நிகழ்வு அனைத்துலக தமிழர் பேரவையின் வருடாந்த ஒன்றுகூடலாகவும் இடம்பெறுகின்றது.

இந்த ஆய்வுப் பொருண்மைகளை எடுத்துரைக்கும் அதேவேளை கேள்விபதில் உரையாடல்களும் பல்வேறு புதிய சிந்தனைகளையும் எண்ணங்களையும் விதைக்கும் வகையில் இடம்பெறவுள்ளது.






# கனடா தபால் சேவை வழமைக்குத் திரும்பும்

நாடு தழுவிய வேலைநிறுத்தத்திலிருந்து சுழற்சி வேலைநிறுத்தத்திற்கு மாறுவதாக கனடிய தபால் ஊழியர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கம் கூறியதை அடுத்து, கனடா போஸ்ட் இன்று பிறக்கும் புதிய வாரத்தில் கனடியர்களுக்கு அஞ்சல் சேவை மீண்டும் தொடங்கும் என்று தெரிவித்துள்ளது.

நேற்று சனிக்கிழமை “கனடிய அஞ்சல் தொழிலாளர்கள் சங்கம் (CUPW) பிரதிநிதித்துவப்படுத்தும் ஊழியர்களை மீண்டும் வரவேற்போம்” என்று கனடா போஸ்ட் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அடுத்த வாரம் அஞ்சல் சேவை மீண்டும் தொடங்கும் என்று கிரவுன் கார்ப்பரேஷன் கூறியது. இருப்பினும், “சுழற்சி வேலைநிறுத்தங்களை நடத்துவதற்கான தொழிற்சங்கத்தின் முடிவால் அஞ்சல் சேவையில் நிச்சயமற்ற தன்மை மற்றும் உறுதியற்ற தன்மை தொடரும்” என்று அது குறிப்பிட்டது.

“எங்கள் தேசிய செயல்பாடுகளை பாதுகாப்பாகவும் ஒழுங்காகவும் மீண்டும் தொடங்குவதை உறுதி செய்வதற்கான” திட்டங்கள் நடந்து வருகின்றன என்று கனடா போஸ்ட் தெரிவித்துள்ளது. இருப்பினும், நிச்சயமற்ற தன்மை தொடரும்வரை சேவை உத்தரவாதங்கள் இடைநிறுத்தப்படும் என்று அஞ்சல் சேவை மேலும் கூறியது.

உள்ளூர் நேரப்படி நேற்று சனிக்கிழமை காலை 6 மணிக்கு சுழற்சி வேலைநிறுத்தங்கள் தொடங்குகின்றது.

“நாங்கள் நாடு தழுவிய வேலைநிறுத்தத்திற்கு நகரும் முடிவை இலகுவாக எடுத்துக்கொள்ளவில்லை. அஞ்சல் ஊழியர்கள் வேலைநிறுத்த நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக புதிய கூட்டு ஒப்பந்தங்களை உருவாக்கி அஞ்சல்களை வழங்குவதையே விரும்புவார்கள்” என்று தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

கனடா போஸ்டுக்குப் பொறுப்பான மத்திய அமைச்சரை தொழிற்சங்கம் சந்தித்த ஒரு நாள் கழித்து இந்த அறிவிப்பு வந்தது.

# 31 ஆண்டுகளுக்கு முன் 10 வயதுச் சிறுமியை கொன்றவர் மரபணு சோதனையில் மாட்டினார்

31 ஆண்டுகளுக்கு முன்பு வடக்கு மொண்ட்ரீல் புறநகர்ப் பகுதியில் 10 வயது சிறுமியைக் கொன்ற வழக்கில் கியூபெக் நபர் ஒருவர் இரண்டாம் நிலை கொலைக் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டுள்ளார். இது பாதிக்கப்பட்ட அந்தப் பெண்ணின் குடும்பத்திற்கு ஒரு முடிவுக்கு வழிவகுத்தது.

ஏற்கனவே வேறு குற்றங்களுக்காக சிறையில் இருக்கும் 62 வயதான ரியால் கோர்ட்மேஞ்ச், இந்த வழக்கின் ஆதாரங்கள், மேரி-சாண்டேல் டெஸ்ஜார்டின்ஸைக் கொலை செய்ததமையை நியாயமான சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கின்றன என்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஒப்புக் கொண்டார்.

10 வயது சிறுமி ஜூலை 16, 1994 அன்று, மொண்ட்ரீலின் வடமேற்கில் உள்ள கியூபாவின் செயிண்ட்-தெரேஸில் ஒரு நண்பரின் வீட்டை விட்டு வெளியேறிய பிறகு காணாமல் போனார். நான்கு நாள்களுக்குப் பிறகு அண்டை சமூகமான ரோஸ்மேரில் உள்ள ஒரு ஷொப்பிங் சென்டருக்குப் பின்னால் உள்ள காட்டில் அவரது உடல் கண்டெடுக்கப்பட்டது.

மரபணுப் பகுப்பாய்வில் முன்னேற்றங்கள் ஏற்படும் வரை - 2023 ஆம் ஆண்டு சிறையில் கோர்ட்மேஞ்ச் இந்த வழக்கிற்காகக் கைது செய்யப்படும் வரை டெஸ்ஜார்டின்ஸின் கொலை ஒரு தீர்வு காணப்படாத வழக்காகவே இருந்தது.

பாதிக்கப்பட்டவரின் தாயார் சில்வி டெஸ்ஜார்டின்ஸ், கியூபாவின் செயிண்ட்-ஜெரோமில் உள்ள நீதிமன்றத்தில், கோர்ட்மாஞ்சேவை இலக்காகக் கொண்ட ஒரு உணர்ச்சிபூர்வமான செய்தியில் உரையாற்றினார். கொல்லப்பட்ட தனது மகளின் சார்பாகப் பேசுவதற்கும், அவரது செயல்கள் தனது பெண்ணை தனது குடும்பத்திலிருந்து எவ்வாறு பிரித்தன என்பதைச் சொல்வதற்கும் தனக்கு மிகுந்த வருத்தமும் திடமும் இருந்தன அவர் கூறினார்.

பின்னர், நீதிமன்ற அறைக்கு வெளியே செய்தியாளர்களிடம் அவர் பேசினார். “இது உண்மையில் விஷயங்களை முடிவுக்குக் கொண்டு வருகிறது. இது 31 வருடப் போராட்டத்தைமுடிக்கிறது,” என்று அவர் கூறினார். “மேரி-சாண்டேல் இப்போது நிம்மதியாக ஓய்வெடுக்க முடியும்.” என்றார் அவர்.

இரண்டாம் நிலை கொலைக்கு கோர்ட்மாஞ்சேவுக்கு அதிகபட்ச தண்



டனை - 25 ஆண்டுகள் பரோல் இல்லாமல் ஆயுள் தண்டனை வழங்குமாறு அரச மற்றும் பிரதிவாதிகள் பரிந்துரைத்தனர். பொதுவாக, இரண்டாம் நிலை கொலைக் குற்றச்சாட்டுகளில், பரோல் தகுதிக்கு முன் அனுபவிக்கும் காலம் குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் முதல் அதிகபட்சம் 25 ஆண்டுகள் வரை இருக்கலாம்.

கியூபெக் உயர் நீதிமன்ற நீதிபதி ஹெலீன் டி சால்வோ ஆலோசனையின் பேரில் பரிந்துரையை கவனத்தில் எடுத்துக்கொண்டு நவம்பர் 10 அன்று ஒரு தீர்ப்பை வெளியிடுவார்.